<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 09.11.2019 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

1. மேட்டூர் நகராட்சியில் காலியாக உள்ள தட்டச்சு பணியிடத்தில் நிரந்தர பணியாளரை பூர்த்தி செய்யும் வரை மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் மாவட்ட அரசிதழ் எண்.7-ல் 2019-20ஆம் ஆண்டிற்கு தட்டச்சு பணிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.576/- விலை விகிதப் பட்டியல் வரப்பெற்றது. மேட்டூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.187 நாள்.26.09.2019-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. விலைப்புள்ளி கோரப்பட்டது. 20.09.2019 அன்று கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | Vells Industrial Training Institute | 575 |
| 2 | Chinnappa Industrial Training Institute | 600 |
| 3 | TamilNadu Industrial Training Institute | 650 |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் vells Industrial Training Institute குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் ஏற்கலாம்
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.4563/2012/ சி1)**

**தீர்மான எண். 209 நாள். 09.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

**2. மேட்டூர் நகராட்சியில் தூக்கணாம்பட்டி துவக்கபள்ளியில் இரண்டாவது நுழைவு வாயில் உள்ள வடக்கு பார்த்த பள்ளி கட்டிடத்தில் மேற்கூரை பழுதடைந்துள்ளதை மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், புத்தகங்கள் மற்றும் பொருள் வைப்பதற்கு Cubboard மற்றும் RO Water அமைத்து PVC குழாய்கள் பொருத்தவும் மற்றும் வர்ணம் பூச தயாரிக்கப்பட்ட**

**மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு:

1. **மன்றம் அனுமதிக்கலாம்**
2. **இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.**

**(ந.க.எண். 3345/2019 இ1)**

**தீர்மான எண். 210 நாள். 09.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

3. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10 எண்ணிக்கை பொது/சமுதாய கழிப்பிடங்களை பொதுமக்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் தினசரி சுத்தம் செய்து பராமரித்து வரும் பணிக்கு, நகராட்சியில் போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லாமல் குறைவாக உள்ளதால், இப்பணியினை மேற்கொள்ள கடந்த 01.12.2018 முதல் ஓராண்டிற்கு கழிப்பிடம் ஒன்றிற்கு மாதம் ரூ.6,000/- சேவைக்கட்டணம் வீதம் கீழ்க்காணும் 10 எண்ணிக்கை பொது/சமுதாய கழிப்பிடங்களை பராமரித்து வர தன்னார்வ தொண்டு நிறுவனமான சுபம் கங்கா சேவா சான்ஸ்தான், பெங்களூர் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட ஓராண்டுக்கான பணி உத்திரவு வருகின்ற 30.11.2019 உடன் முடிவடைகிறது.

| வ.எண் | வார்டு எண் | பொதுக்கழிப்பிடம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1 | 03 | தங்கமாபுரி பட்டினம் மார்கெட் அருகில் |
| 2 | 07 | காமராஜர் நகர் |
| 3 | 10 | மாதியன் குட்டை ராஜாஜி நகர் |
| 4 | 12 | எலிக்கரடு |
| 5 | 15 | தூக்கனாம்பட்டி நகராட்சி பள்ளி அருகில் |
| 6 | 21 | நேதாஜி நகர் |
| 7 | 23 | கூலி லைன் |
| 8 | 24 | சதுரங்காடி தினசரி மார்கெட் |
| 9 | 28 | குமரன் நகர் |
| 10 | 29 | கீழ்குள்ளவீரன்பட்டி |

மேற்காணும் 10 எண்ணிக்கை பொது/சமுதாய கழிப்பிடங்களை 01.12.2019 முதல் 30.11.2020 முடிய ஓராண்டிற்கு தன்னார்வ தொண்டு நிறுவனமான சுபம் கங்கா சேவா சான்ஸ்தான், பெங்களூர் மூலம் பொதுமக்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் தினசரி சுத்தம் செய்து பராமரித்து வரவும் அதற்கான சேவைக்கட்டணமாக ஒரு மாதத்திற்கு கழிப்பிடம் ஒன்றிற்கு ரூ.6,000/- வீதம் 10 கழிப்பிடங்களுக்கு ரூ.60,000/- சுபம் கங்கா சேவா சான்ஸ்தான், பெங்களூர்

அவர்களுக்கு வழங்கவும் ஓராண்டிற்கான தோராய செலவினம் ரூ.7.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத் தொகையினை திடக்கழிவு மேலாண்மை நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3216 /2018/எச்1 )**

**தீர்மான எண்.** 211 **நாள்.** 09.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

**4.**அரசாணை **(**நிலை**)** எண்.**92,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் **(**நநி**4),** துறை, நாள்.**03.07.2007–**ல் பத்தி எண்.**4**(iii)**–**ல் நகராட்சி கடைகள் ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளபடி **31.03.2016** உடன் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த **98** கடைகளுக்கு வாடகைகளை மறு மதிப்பீடு செய்ய ஏற்கனவே உள்ள வாடகை தொகை மற்றும் வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத் தொகை ஆகியவற்றை குறிப்பிட்டு நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. மேற்படி நகர்மன்றம் தனது தீர்மான எண்.**549,** நாள்.**30.06.16–**ல் ஏற்கனவே உள்ள வாடகைத் தொகையில் இருந்து 40% உயர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் வாடகைத் தொகை நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு, அனைத்து கடையின் உரிமதாரர்களுக்கும் வாடகைத் தொகையை செலுத்த தெரிவிக்கப்பட்டது. ஆனால் IUDP SHOP No:10, MUDF SHOP No:4, MUDF SHOP No:15 and MUDF SHOP No:16 ஆகிய கடைகளின் உரிமதாரர்கள், மேற்படி உயர்வு செய்த தொகை அதிகம் என்பதால், தொடர்ந்து தங்களால் கடையை நடத்த இயலாது எனவும், எனவே நகராட்சி வசம் கடைகளை ஒப்படைப்பதாகவும் தெரிவித்து மனு செய்தனர். இதனடிப்படையில் மேற்படி கடைகளை நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்ட மறு ஏலம் கோரப்பட்டு வந்தது. இந்நிலையில் மேற்காணும் 4 கடைகளின் கேட்புத் தொகை ( உரிமதாரரால் இந்நகராட்சியில் கடையை ஒப்படைத்த பிறகு ) தவறுதலாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் 4 கடைகளின் கேட்புத் தொகையையும் கீழ்க்காணும் விவரப்படி கணினியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

IUDP SHOP No:10 ( 2018-2019 ), MUDF SHOP No:4 ( 2017-2018 & 2018-2019 ) MUDF SHOP No:15 ( 2018-2019 ) and MUDF SHOP No:16 ( 2018-2019 ) மேலும் IDSMT DAILY MARKET – NORTH SIDE SHOP No:4 ( 2019-2020 (Jun) ) கடையை ஏற்கனவே ஏலம் விடப்பட்டு புதிய உரிமதாரரிடம் 2018-2019 முதல் ஒப்படைப்பு

செய்யப்பட்டுள்ளது. எனவே இக்கடைக்கும் தவறுதலாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட கேட்புத் தொகையையும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 10137/2006/பி1)**

**தீர்மான எண்.** 212 **நாள்.** 09.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

**5. 2018–19** ஆம் நிதியாண்டிற்கான ஆண்டுக் கணக்கினை புதிதாக உருவாக்கப்பட்ட CWBS மென்பொருளில் தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்திடும் பொருட்டு, சென்ற ஆண்டில் கணினியில் இந்நகராட்சியின் ஆண்டுக் கணக்கினை தயார் செய்து தணிக்கைத் துறைக்கு சமர்ப்பித்த திரு.J.கிருஷ்ணமூர்த்தி என்பவரையே **2018–19** ஆம் நிதியாண்டிற்கும் நியமித்துக் கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**50,000/–** க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1093/2019/பி1)**

**தீர்மான எண்.** 213 **நாள்.** 09.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

**6.** இந்நகராட்சிக்குச் சொந்தமான IDSMT திட்டத்தில் கட்டப்பட்டு மேட்டூர் கேம்ப் தினசரி மார்க்கெட் கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு **10.06.2019**ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. மேட்டூர் கேம்ப் தினசரி அங்காடியின் வடபுறக்கடை எண்.**3**க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.நாகராஜன்,<br>த/பெ.ரத்தினவேல்,<br>J பிளாக்–2,<br>கூலி லைன்,<br>மேட்டூர் அணை. | ரூ.2,813/- |
| 2. | திருமதி.என்.மாணிக்கம்மாள்,<br>J பிளாக்–2,<br>கூலி லைன்,<br>மேட்டூர் அணை. | ரூ.1,750/- |

அலுவலக குறிப்பு:

மேற்படி கடை எண்.3க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.ஆர்.நாகராஜன், மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.2,813/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது ஏற்கனவே இருந்த வாடகையை விட ரூ.639/– மட்டுமே குறைவாக உள்ளது. இக்கடைக்கு இதுவரை சுமார் 12 முறை மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இதுவரை ஏலமோ / ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோரவில்லை. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி அதிகபட்சமாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.6232/2006/அ2 )

**தீர்மான எண். 214 நாள். 09.11.2019**

**இக்கடைக்கு இதுவரை சுமார் 12 முறை மறு ஏலம் /ஒப்பந்தப்புளி கோரப்பட்டு, ஏலமோ / ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோராததால், நகராட்சியின் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு இந்த ஒப்பந்தப் புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சிக்குச் சொந்தமான MUDF திட்டத்தில் கட்டப்பட்டு மேட்டூர் கேம்ப் தினசரி மார்க்கெட் பகுதியில் காலியாக உள்ள கடைகளுக்கு 30.09.2019ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. MUDF கடை எண்.3க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு நான்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திருமதி.பி.அம்பிகா,<br>க/பெ.பாலமுருகன்,<br>1/2 70 A சித்திரப்பட்டி புதூர்,<br>கொளத்தூர். | ரூ.14,000/- |
| 2. | திரு.எஸ்.பாலமுருகன்,<br>த/பெ.சண்முகம்,<br>1/59, சித்திரப்பட்டி புதூர்,<br>கொளத்தூர். | ரூ.13,000/- |
| 3. | திரு.எஸ்.ராஜா,<br>த/பெ.எம்.ஆர்.செல்வம்,<br>F பிளாக் 54, கூலி லைன்,<br>மேட்டூர் அணை. | ரூ.8,110/- |
| 4. | திரு.கே.அனந்தநாராயணன்,<br>த/பெ.கருப்பண்ணன்,<br>26/39, காவேரி பாலம், மீனவர் தெரு,<br>மேட்டூர் அணை. | ரூ.7,560/- |

அலுவலக குறிப்பு:

மேற்படி கடை எண்.3க்கு வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.பி.அம்பிகா, மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.14,000/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது ஏற்கனவே இருந்த வாடகையை விட ரூ.946/– கூடுதலாக உள்ளது. இக்கடைக்கு இதுவரை சுமார் மூன்று முறை மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி அதிகபட்சமாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.10137/2006/அ2 )**

**தீர்மான எண்.** 215 **நாள்.** 09.11.2019
**அனுமதிக்கப்பட்டது.**

**8.** அரசாணை (நிலை) எண்.650 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.08.04.1975ல் அந்தந்த நகர்மன்றங்களை 1971ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ஊரமைப்பு சட்டத்தின் பிரிவு 11ல் உட்பிரிவு(1)–க்குறிய காப்புரையின்படி, ஓர் உள்ளூர் திட்டப்பகுதி முழுவதும் ஒரே உள்ளாட்சி மன்றத்தின் பகுதிக்குள் அமைந்தால், அம்மன்றங்களை அப்பகுதிக்குரிய தனித்த உள்ளூர்

திட்டக்குழுமமாக (Single local planning authority) அரசு அறிவிக்கலாம் என்பதற்கிணங்க, மேலே கண்டுள்ள அரசாணையில் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளபடி, இந்நகர்மன்றம் இந்நகராட்சிப் பகுதிக்குரிய தனித்த உள்ளூர் திட்டக்குழுமமாகவும் மற்றும் அரசாணை(நிலை ) எண்.651, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.08.04.1975ன்படி அந்தந்த உள்ளாட்சி மன்றங்களின் தலைவர் உறுப்பினர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் அந்தந்த உள்ளூர் திட்டக்குழுமத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் செயல் அலுவலர்களாக நியமித்து அரசு ஆணையிட்டதினை தொடர்ந்து மேட்டூர் தனித்த உள்ளூர் திட்டக்குழுமம் செயல்பட்டு வருகிறது.

இந்நேர்வில் உள்ளாட்சி தேர்தல் 2019, விரைவில் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாலும் அவ்வமயம் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருக்கும் என்பதாலும், பொது மக்கள் கட்டிட அனுமதி கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு பொருள் சமர்ப்பித்திட கூட்டம் நடத்த இயலாத காரணத்தினாலும் மேற்படி கட்டிட விண்ணப்பங்களை உரிய காலத்திற்குள் பரிசீலித்து உத்திரவிட ஏதுவாக மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ளபடி, பொது மக்கள் நலன்கருதி, 1971ம் வருடத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு ( 1972ம் வருடத்திய சட்டம் 35) 91–எ(1)ன் படி, உள்ளூர் திட்டக்குழுமம் ஆனது தனது அதிகாரத்தை நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தல் 2019 நடைபெற்று புதிதாக உள்ளூர் திட்ட குழுமம் அமைக்கப்படும் வரை நகராட்சி ஆணையருக்கு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அவசர அவசியத்தை முன்னிட்டும் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் உள்ளூர் திட்டக்குழுமத்தின் அதிகாரத்தை நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தல் 2019 நடைபெற்று புதிதாக உள்ளூர் திட்ட குழுமம் அமைக்கப்படும் வரை நகராட்சி ஆணையாளருக்கு அளிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(ந.க.எண். 5064 /2018/எப்1)</u>
**தீர்மான எண்.** 216 **நாள்.** 09.11.2019
**அனுமதிக்கப்பட்டது.**

9. மேட்டூர் நகரின் அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7308.78 இலட்சத்திற்கு அரசாணை (D) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நிIII) துறை நாள்.27.01.2014–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி

திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிகளில் இரண்டு முழுமையாக மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் அனைத்தும் ஆகஸ்ட் 2018–க்குள் முடிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் பல வார்டுகளில் சில பகுதிகளில் உள்ள தெருக்களில் சேகரிப்பு குழாய்களான கழிவு நீர் குழாய் பதித்தல் பணிகள் விடுபட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்குள் செய்ய நிதி ஆதாரம் இல்லை என்பதால் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தின் சேகரிப்பு கழிவு நீர் குழாய் பதிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம் அவர்களால் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

விடுபட்ட பகுதிகளுக்கு 10.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் சேகரிப்பு கழிவு நீர் குழாய்கள் , வீட்டு இணைப்புகளுக்கான குழாய், நீருந்து நிலையங்கள் (4 எண்ணிக்கை) ,சுற்றுச்சுவர் மற்றும் வீட்டில் உட்புறங்களில் கழிவுநீர் குழாய் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 978.00 இலட்சத்தினை ஈடு செய்ய மேட்டூர் நகராட்சி நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை.

எனவே, மேற்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 978.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணையினை அனுப்பப்பட்டது. அரசாணை (M.S) எண்.82, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்.23.08.2018–ல் மேற்கண்ட பணிகள் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM 2018-2019)–ல் மேற்கொள்ள ரூ.978.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணியினை மேற்கொள்ள 14.02.19ல் முதன்முறை ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்படாததால் இரண்டாவது முறையாக 20.03.2019– ல் ஒப்பந்த புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு. ஆர்.ஆனந்த் ஒப்பந்ததாரர், ஓமலூர் |
| 2 | M/S KPS ENGINEERING ஒப்பந்ததாரர், மேட்டூர் அணை |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் **06.06.2019**ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு** |
|---|---|---|
| 1 | திரு. ஆர்.ஆனந்த் ஒப்பந்ததாரர், ஓமலூர் | **19.00.%** அதிகம் |
| 2 | M/S KPS ENGINEERING ஒப்பந்ததாரர், மேட்டூர் அணை | **21.00.%** அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட **19.00%** கூடுதலாக வழங்கியுள்ள திரு. ஆர்.ஆனந்த் ஒப்பந்ததாரர், ஓமலூர் அவர்களுக்கு **06.06.2019**ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது **11.06.2019**ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக **16.00%** விலை குறைப்பு செய்ய ஒப்புதல் அளித்திருந்தார். இரண்டாவது முறை **11.06.2019**ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் திரு. ஆர்.ஆனந்த் ஒப்பந்ததாரர், ஓமலூர் **21.06.2019**ம் தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக **16.00%** வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை, குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே இப்பணியினை மேற்கொள்ள **20.08.19**ல் மூன்றாவது முறையாக ஒப்பந்த புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றது.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி** |
|---|---|
| 1 | M/S. A.R. CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர் |
| 2 | M/S. AMMAN CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில், A.R. CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர் மட்டும் தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளி ஆகும். ஆதலால், மேற்கண்ட ஒப்பந்த புள்ளியின் விலைவிகித பட்டியல் **28.08.2019**ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S. A.R. CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 18.00.% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட 18.00% கூடுதலாக வழங்கியுள்ள A.R. CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர்அவர்களுக்கு 29.08.2019ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 04.09.2019ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக வழங்கியதில் விலை குறைப்பு செய்து 14% கூடுதலாக ஒப்புதல் அளித்துள்ளார். இரண்டாவது முறை 05.09.2019ல் விலைக்குறைப்பு கோரியதில் ஒப்பந்ததாரர் தனது 10.09.2019ம் தேதிய கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்து மதிப்பீட்டை விட கூடுதலாக 12 சதவிகிதத்திற்கு ஒப்புதல் அளித்திருந்தார். மீண்டும் மூன்றாவது முறையாக A.R. CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர் அவர்களுக்கு 10.09.2019ல் விலைக்குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் 12.09.2019ம் தேதிய கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்து மதிப்பீட்டை விட கூடுதலாக 9.97 சதவிகிதம் ஒப்புதல் அளித்திருந்தார்.

மேலும் நான்காவது முறையாக 06.11.2019 ல் விலைக்குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் A.R. CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர் தனது 07.11.2019ம் தேதிய கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக ஒப்பந்த புள்ளி விகிதத்தை வழங்கி கட்டுமான பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக இதற்குமேல் தன்னால் குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே A.R. CONSTRUCTIONS ஒப்பந்ததாரர், ஆத்தூர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.95% அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின்அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2557/2018 இ1)**

தீர்மான எண். 217 நாள். 09.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் அவசரக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 21.11.2019ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

1) இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் கிழக்குபுற நிரந்தரக் கடை எண்.1ன் உரிமம் திரு.எஸ்.பி.ராஜா, மேட்டூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி உரிமைதாரர் தான் வெளியூர் சென்று வேலை செய்வதால், தன்னால் தொழிலை நடத்த இயலாததால், கடையின் அனுபோக உரிமையை அனுமதியற்ற அனுபோகதாரர் திருமதி.ஆர்.அலமேலு என்பவர் பெயருக்கு மாற்றித் தரும்படி கோரியுள்ளார். அரசாணை (நிலை ) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை, நாள்.03.07.2007 பத்தி எண்.4(V) ல் அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில், ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில், குத்தகை உரிமத்தை அவர்களுடைய பெயரில் மாற்றித் தரலாம். இதற்காக விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன்பணமாகச் செலுத்த வேண்டும். இது தவிர குறைந்த அளவு தொகைகுட்பட்டு, 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும் அவர் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி 12 மாத வாடகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும், 12 மாத வாடகையை முன்பணமாகவும் பெயர் மாற்றம் செய்யக் கோரிய மனுதாரர் இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார்.எனவே பேருந்து நிலையத்தில் கிழக்குபுற நிரந்தரக் கடை எண்.1ன் உரிமத்தை திரு.எஸ்.பி.ராஜா என்பவர் பெயரிலிருந்து திருமதி.ஆர்.அலமேலு என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.97/2019/அ2 )**

**தீர்மான எண்.** 218 **நாள்.** 21.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட்டில் IDSMT திட்டத்தில் கட்டப்பட்ட தென்புறக் கடை எண்.2ன் உரிமம் திரு.ஆர்.ரவி, மேட்டூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமதாரர் தான் வெளியூர் சென்று வேலை செய்வதால் தன்னால் தொழிலை நடத்த இயலாததால், கடையின் அனுபோக உரிமையை அனுமதியற்ற அனுபோகதாரர் திருமதி.தீபா என்பவர் பெயருக்கு மாற்றித் தரும்படி கோரியுள்ளார். அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி4) துறை, நாள்.03.07.2007 பத்தி எண்.4(V) ல் அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில், ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில், குத்தகை உரிமத்தை அவர்களுடைய பெயரில் மாற்றித் தரலாம். இதற்கான விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதாந்திரத் தொகைக்கு சமமான தொகையை முன்பணமாகச் செலுத்த வேண்டும். இது தவிர குறைந்த அளவு தொகைக்குட்பட்டு 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும் அவர் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி பெயர் மாற்றம் செய்யக்கோரி மனுதாரர் 12 மாத வாடகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும், 12 மாத வாடகை முன்பணமாகவும் இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். எனவே தினசரி மார்க்கெட்டில் IDSMT திட்டத்தில் கட்டப்பட்ட தென்புறக் கடை எண்.2ன் உரிமத்தை திரு.ஆர்.ரவி என்பவர் பெயரிலிருந்து திருமதி.தீபா, என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.98/2019/அ2 )**

**தீர்மான எண்.** 219 **நாள்.** 21.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

**3.** அரசாணை எண். (MS) **150** நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை நாள். **19.11.2019–** ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – **28** அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். **40032/2012/**ஆர் நாள். **20.11.2019** – ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், அரசாணை எண்**–76** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்**. 26.07.2018 –** ன் படி

**01.04.2018** ம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு ( Revesion of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வினையும், சொத்து வரி விதிப்புக்கான மண்டல மதிப்பு ( Zonal Rate) **01.04.2018** முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் **01.10.2017** ம் தேதி முதல் சொத்துவரி வரி மறு சீராய்வு ( Remessurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4152/2018/அ1)**

**தீர்மான எண்.** 220 **நாள்.** 21.11.2019

**பதிவு செய்யப்பட்டது மற்றும் அனுமதிக்கப்பட்டது.**

**4.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் **2019–2020**ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**17349/2019/E3** நாள்.**14.10.2019**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு Turip **2019–2020** (Package-1) Improvement to the BT Surface due to damage in UGSS weekly santy road, Thangamapuripattinam main road ,VOC street பணியினை ரூ. **126.00** இலட்சத்திற்கு மேற்கொள்ள **07.11.19**ல் முதன்முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் |
| 2 | திருவாளர். P. பரமசிவம் ஒப்பந்ததாரர், ஓமலூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் **09.11.2019**ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் | 4.97% அதிகம் |
| 2 | திருவாளர். P. பரமசிவம் ஒப்பந்ததாரர், ஓமலூர் | 6.49% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட **4.97%** கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் அவர்களுக்கு **09.11.2019**ல்

விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது **11.11.2019**ம் தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்கள், தார் மற்றும் எரிபொருட்கள் விலை உயர்வு காரணமாகவும் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.97%** வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை, குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதால் திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.97%** அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2338–1/2019/இ1)**

**தீர்மான எண்.** 221 **நாள்.** 21.11.2019

**அனுமதிக்கப்பட்டது**.

**5.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் **2019–2020**ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–**5** அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**17349/2019/**E3 நாள்.**14.10.2019**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு Turip **2019–2020** (Package-II) Improvement to the BT Surface due to damage in UGSS Salem Camp ESI south side road, government arts college Front side road, ICH road up to Mathaiyankuttai main road பணியினை ரூ. **144.00** இலட்சத்திற்கு மேற்கொள்ள **07.11.19**ல் முதன்முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் |
| 2 | திருவாளர். P. பரமசிவம் ஒப்பந்ததாரர், ஓமலூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் **09.11.2019**ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் | 4.99% அதிகம் |
| 2 | திருவாளர். P. பரமசிவம் ஒப்பந்ததாரர், ஓமலூர் | 6.50% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட **4.99%** கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் அவர்களுக்கு **09.11.2019**ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது **11.11.2019**ம் தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்கள், தார் மற்றும் எரிபொருட்கள் விலை உயர்வு காரணமாகவும் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.99%** வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை, குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதால் திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.99%** அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2338–2/2019/இ1)**

**தீர்மான எண்.** 222 **நாள்.** 21.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

**6.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் **2019–2020**ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–**5** அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**17349/2019**/E3 நாள்.**14.10.2019**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு Turip **2019–2020 (**Package-III) Improvement to the BT Surface due to damage in UGSS Court road in Commissioner Quarters front side road, Connecting east main road and west main road @ Municipal Office north side road, Nehru nagar main road up to Burial Grount பணியினை ரூ. **113.00** இலட்சத்திற்கு மேற்கொள்ள **07.11.19**ல் முதன்முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் |
| 2 | திருவாளர்.சின்னகண்ணு & கோ ஒப்பந்ததாரர், சின்னப்பம்பட்டி, ஓமலூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் **09.11.2019**ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் | 4.95% அதிகம் |
| 2 | திருவாளர்.சின்னகண்ணு & கோ ஒப்பந்ததாரர், சின்னப்பம்பட்டி, ஓமலூர் | 6.61% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட **4.95%** கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் அவர்களுக்கு **09.11.2019**ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது **11.11.2019**ம் தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்கள், தார் மற்றும் எரிபொருட்கள் விலை உயர்வு காரணமாகவும் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.95%** வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை, குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதால் திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.95%** அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2338–3/2019/இ1)**

**தீர்மான எண்.** 223 **நாள்.** 21.11.2019

அனுமதிக்கப்பட்டது.

7. மேட்டுர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2019–2020ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.17349/2019/E3 நாள்.14.10.2019ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு Turip 2019–2020 (Package-IV) Improvement to the BT Surface due to damage in UGSS Ponnagar Kullaveeranpatty main road, EB Central Office road in front of Government school front side road பணியினை ரூ. 117.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள 07.11.19ல் முதன்முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் |
| 2 | திருவாளர்.சின்னகண்ணு & கோ ஒப்பந்ததாரர், சின்னப்பம்பட்டி, ஓமலூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் 09.11.2019ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் | 4.96% அதிகம் |
| 2 | திருவாளர்.சின்னகண்ணு & கோ ஒப்பந்ததாரர், சின்னப்பம்பட்டி, ஓமலூர் | 6.64% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட 4.96% கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 09.11.2019ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 11.11.2019ம் தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்கள், தார் மற்றும் எரிபொருட்கள் விலை உயர்வு காரணமாகவும் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.96% வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை, குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதால் திருவாளர். R M AND COMPANY ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.96% அதிகமாக

வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2338–4/2019/இ1)**

**தீர்மான எண். 224 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

**8.** ஆடி பெருக்குவிழாவிற்காக (ஆடி18 ம் நாள்) முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து வருவாய் கோட்டாட்சியர், மேட்டூர் அவர்களால் **24.07.2019** ஆம் தேதி நடைபெற்ற ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில், மேற்படி ஆடி **18** (ஆகஸ்ட் **3** ஆம் தேதி) விழாவிற்கு அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வாகனங்கள் நிறுத்தம் செய்யும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக வசதி செய்தல் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சிக்கு உத்தரவிடப்பட்டது. எனவே மேற்படி மைதானத்தில் நிறுத்தம் செய்யும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்ய **31.07.2019** அன்று நகராட்சியால் குறுகியகால பொது ஏலம் நடத்தப்பட்டது. மேற்படி ஏலத்தில் எவரும் கோரவில்லை. இதனால் மேற்படி மைதானத்தில் வாகனங்கள் நிறுத்தம் செய்யும் பொது மக்களிடம் நகராட்சியால் கட்டணம் வசூல் செய்யமுடிவு செய்யப்பட்டது.

மேற்படிகட்டணம் வசூல்செய்யும் பொருட்டு இந்நகராட்சியில் ஏற்கனவே டிக்கெட் புத்தகங்கள்இருப்பில்இல்லாததாலும், ஆகஸ்ட் **3** ஆம் தேதியன்றுகட்டணம் வசூலிக்கப்பட வேண்டி இருந்ததாலும்,அவசரஅவசியம் கருதி உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று அச்சிட விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படிவரப்பெற்ற விலைப்புள்ளிகள்விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ.எண். | விலைப்புள்ளிவழங்கியவர் விவரம் | விலைப்புள்ளிவிவரம் |
|---|---|---|
| 1. | பூபதிஅச்சகம்,<br>8–36ஏ, கிழக்கு மெயின் ரோடு,<br>(பழையமார்க்கெட்),<br>மேட்டூர் அணை. | ரூ.36.00 |
| 2. | ஸ்ரீ வீரமாத்தியம்மன் பிரிண்டர்ஸ்,<br>கிழக்கு மெயின் ரோடு,<br>கமலம் இல்லம், 166–93, இந்திராநகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.40.00 |
| 3. | பரணிபிரஸ்,<br>இந்திராநகர், மேட்டூர் அணை. | ரூ.44.00 |

அலுவலகக் குறிப்பு

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசைஎண்.1ல் கண்டுள்ளவிலைப்புள்ளி தொகையானது குறைவானது என்பதாலும், ஆகஸ்ட்3 ஆம் தேதி அன்று கட்டணம் வசூலிக்கப்பட வேண்டி இருந்ததாலும், அவசர அவசியம் கருதிவரிசை எண்.1ல் கண்டுள்ள பூபதி அச்சகம், மேட்டூர்அணை அச்சகத்தாரின் விலைப்புள்ளியை உறுதிசெய்து உத்தரவு வழங்கியமைக்கும், அதற்குரிய செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2638/2019/அ2)**

**தீர்மான எண். 225 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

9. மேட்டூர் நகராட்சி தூக்கனாம்பட்டி நகராட்சி துவக்கப்பள்ளியில் மேற்கூரையில் உள்ள பழுதை சரிசெய்தல் மற்றும் கட்டிடத்திற்கு cubboard, வர்ணம் பூசுதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.11.2019ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s N.R & CO<br>Mettur | 0.20% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | Thiru.M.Ramasamy<br>Vanavasi (Po)<br>Mettur | 2.15% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு. M/s N.R & CO, Mettur. ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.3345/2019/ இ1)**

**தீர்மான எண். 226 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

10. மேட்டூர் நகராட்சி தலைமை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் புதிய சுத்திகப்பு நிலையத்திற்கு Bleaching Powder 1டன் மற்றும் 4 டன் ஆலம் வாங்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.00

இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.330–1/2019/ இ1)**

**தீர்மான எண். 227 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

11. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 சவுரியம்மாள் நகரில் உள்ள மழைநீர் வடிகால் உடைந்து சேதமடைந்துள்ளதால் புதியதாக மழைநீர் வடிகால் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4256/2019/ இ1)**

**தீர்மான எண். 228 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

12. மேட்டூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 16 எண்ணிக்கைகளான Battery Operator Vehicle நிறுத்துவதற்கும் மேற்கண்ட வாகனத்திற்கு Charge வசதிகள் அமைக்கவும் தூக்கணாம்பட்டி நுண் உரக் கூடத்தின் எதிரில் உள்ள A.C Sheet Shed சேதமடைந்துள்ளதை சரி செய்து கான்ங்கிரீட் தளம் அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை தூய்மை இந்தியா திட்டம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்க்கொள்ளப்படுகிறது.

**(ந.க.எண்.4519/2019/ இ1)**

**தீர்மான எண். 229 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

13.மேட்டூர் நகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் - 2019 முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக வாக்கு சாவடி மையமாக பராமரிப்பு செய்து மையங்களுக்கு வர்ணயம் பூசுதல் மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இதில் தடுப்புகள் மற்றும் பராமப்பு பணிகள் மேற்க்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.15.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தேர்தல் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4581/2019/ இ1)**

**தீர்மான எண். 230 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

**14.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு காம்பேக்டர் வாகனம் (வாகனம் எண்:டி என் 52 டி 8604)-க்கு வாட்டர் பம்ப், பேன் பெல்ட், பேரிங் ஒயரிங் பழுது சரி செய்யப்பட்டதற்கான செலவுத்தொகை ரூ.2030/-ஐ வாகன ஓட்டுநர் திரு.எம்.ரவி அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
2. செலவினத் தொகை ரூ. 2030/–ஐ வருவாய் நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3653/2019/எச்1)**

**தீர்மான எண். 231 நாள். 21.11.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

15. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட 14வது வார்டு பகுதியல் பியர்ட்செல் காலணி என்ற பெயரில் புதிய குடியிருப்பு உருவாகி சுமார் 30க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

மேற்கண்ட பியர்ட்செல் காலணி பகுதி குடியிருப்பு மக்களுக்கு தெருவிளக்கு அமைக்க 11 எண்ணிக்கைகளான கம்பங்கள் அமைத்து மின்சார கம்பிகள் பொருத்த ஆகும் செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3847/2019/இ1)**

**தீர்மான எண்.** 232 **நாள்.** 21.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

**16.** மேட்டூர் நகராட்சியில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்கள் 4 எண்ணம், செயின் மேன் 1 எண்ணம், தெருவிளக்கு பராமரிப்பாளர் 2 எண்ணிக்கை, குடிநீர் பணியாளர்கள் 4 எண்ணம் சாலைப் பணியாளர்கள் 6 எண்ணிக்கை, பண்ணைப் பணியாளர்கள் 4 எண்ணிக்கை , துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் (ஆண்–3, பெண்–2) = 5 எண்ணிக்கை, ஓட்டுநர்கள் 8 எண்ணிக்கை, நகர சுகாதார செவிலியர் பெண்1 எண்ணிக்கை மகப்பேறு ஆயா பெண்–1 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்கள் ஆண்கள் 40, பெண்கள் 37 ஆக மொத்தம் 77 எண்ணிக்கை ஆக மொத்தம் அனைத்து பிரிகளிலும் மொத்தம் 71 ஆண் பணியாளர்கள், 41 பெண் பணியாளர்கள் மொத்தம் 112 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே மேற்காணும் பணியாளர்களுக்கு 2019–2020 ஆண்டிற்கான சீருடைகள் காக்கி, சேலை , ஜாக்கெட் மற்றும் தலைப்பாகை துணி மற்றும் தையற்கூலி உட்பட வழங்க வேண்டியுள்ளது. எனவே சீருடைகள் மற்றும் தையற்கூலி உள்பட செலவினம் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.2,50,000 /– ஆகும். எனவும் மேற்படி சீருடைகளை அரசு சார்ந்த நிறுவனமான கோ–ஆப் டெக்ஸ்சில் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(கட்டு எண்.2711/2019/எச்1)**

**தீர்மான எண்.** 233 **நாள்.** 21.11.2019

**அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**